02.09.2025

O.S.No. 250/2020

PW1– உலகநாதன் – த/பெ. ராஜா சுப்பிரமணியன்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.09.2025

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதி தரப்பில்)

1. எனக்கு வழக்கின் விவரம் தெரியும். வழக்கு 2ம் தபசில் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகையும், அதில் பிரதிவாதி எந்த இடைஞ்சலும் செய்யக்கூடாது என நிரந்தரதடையாணை கோரியுள்ளேன் என்றால் சரிதான். 2ம் தபசில் சொத்து 1ம் தபசில் சொத்தின் ஒருபகுதி என்றால் சரிதான். தபசில் சொத்தாதுன புல எண்.383/6, 383/8, 383/9ல் உள்ளது. 1ம் தபசில் சொத்தானது வைரவன் சன்னதி தெருவுக்கு கீழ்பக்கம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தென்பகுதியிலும், கீழ்பகுதியிலும் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது என்றால் சரிதான். வேலுமுதலியார் மனைக்கு தென்பக்கமாக தபசில் சொத்து உள்ளது என்றால் சரிதான்.

2. வழக்குசொத்துக்கான உத்தேசவரைபடம் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் தபசில் சொத்து வா.சா.ஆ.3 ஆவணத்தில் HCDG என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து எனது தந்தையின் பூர்வீக சொத்து. 2009 ஏற்பாடு ஆவணத்தின் அடிப்படையில் எனது தந்தை 1ம் தபசில் சொத்தை எனக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அது தான் வா.சா.ஆ.1 என்றால் சரிதான். புல எண்.383/8 ஆனது வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் சர்க்கார் புறம்போக்கு என உள்ளது என்றால் சரியல்ல.

நாங்கள் பொது நடைபாதையை மாற்றுவதற்காக எனது தந்தை கொடுத்த அனைத்து மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு கீழ்பக்கம் முடுக்கு, அதற்கு பின் 2 வீடுகள் உள்ளது என்றால் சரிதான். புல எண்.383/8 பொதுநடைபாதையானது எனதுவீடு, எனது வீட்டிற்கு கீழ்புறமுள்ள பிரதிவாதிகளுக்கான பொதுநடைபாதை என்றால் சரியல்ல. என் தந்தை பிரதிவாதியின் தந்தைக்கு ஆண்டுக்கு ஒருமுறை மார்கழி மாதத்தில் வெள்ளையடிக்கும் உரிமை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அது அவருக்கு மட்டும் ஒதுக்கப்பட்ட தனிப்பட்ட உரிமை. ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே எங்களிடம் அனுமதி பெற்று வெள்ளையடிக்கும் உரிமை. பொதுப்பாதை 1மீட்டர் அளவு கொண்டது என்றால் சரியல்ல. அளவு 1 மீட்டர், ஆனால் பொதுபாதை கிடையாது. அந்த பொதுபாதையும் சேர்த்துதான் எனது தந்தை எனக்கு ஏற்பாடு ஆணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தென்வடல் அடி 66 என்றால் சரிதான். பொதுபாதையை அடைத்து மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி உரிமை கோரியதால்தான் அவர் மீது இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தனதுஅறிக்கையில் பொதுபாதை எனகுறிப்பிட்டு கூறியுள்ளார் என்றால் சரியல்ல. ஆணையரின் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட "அ" பதிவேட்டில் பொதுபாதை இல்லை என துலங்குகிறது. நான் கற்பனையாக பிரதிவாதியை பழிவாங்கவேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த வழகதை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரியல்ல. அது எனக்கு பாத்தியப்பட்ட இடம். பிரதிவாதியின் சகோதரரை கட்சி சேர்க்காததால்

எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனது வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.